பிரஸார் பாரதி
இந்திய வானொலி, சென்னை-4

10 06 2025 — 12 40
செவ்வாய்கிழமை — பிற்பகல்

ஆகாஷவாணி செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. பாதுகாப்புத் துறையில் நவீனமயம் மற்றும் சுயசார்புக்கு கடந்த 11 ஆண்டுகளில் உயர்முன்னுரிமை அளிக்கப்பட்டு குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

2. தேசிய ஜனநாயக கூட்டணி ஆட்சியில் பொருளாதாரம், பாதுகாப்பு, தொழில்நுட்பம் உட்பட அனைத்துத் துறைகளும் பெரும் வளர்ச்சி கண்டுள்ளதாக மத்திய அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

3. மத்திய அரசின் செயல்பாடுகளால் நாட்டின் பொருளாதாரம் உலகளவில் நான்காவது இடத்திற்கு முன்னேறியுள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு எல் முருகன் தெரிவித்துள்ளார்.

4. கல்வி, சுகாதாரம் உட்பட தமிழகத்தின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு உலக வங்கி உறுதுணையாக உள்ளதாக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் கூறியுள்ளார்.

5. ஆஸ்திரியா நடைப்போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப் பதக்கம் வென்றது.

*--- இனி விரிவான செய்திகள் ---*

பாதுகாப்புத் துறையில் கடந்த 11 ஆண்டுகளில் நவீனமயம் மற்றும் சுயசார்புக்கு உயர்முன்னுரிமை அளிக்கப்பட்டு குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில் பாதுகாப்புத் தளவாட உற்பத்தியில் சுயசார்பு நாடாக இந்தியா உருவெடுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவை வலிமையான நாடாக மாற்றுவதற்கான முயற்சிகளில் நாட்டு மக்கள் அனைவரும் ஒருங்கிணைந்து செயல்படுவது மிகுந்த மகிழ்ச்சி அளிப்பதாகவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

>><><><<

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான ஆட்சியில் பாதுகாப்புத் துறை பெருமளவு நவீனப்படுத்தப்பட்டுள்ளதாக அத்துறைக்கான அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் கூறியுள்ளார்.

பாதுகாப்பு துறையின் 11 ஆண்டுகால சாதனை குறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், பாதுகாப்புத் தளவாடங்களுக்கு முன்பு இறக்குமதியை அதிகம் சார்ந்திருந்த நிலையில் தற்போது உலக அளவில் ஏற்றுமதி செய்யும் நம்பகமான நாடாக இந்தியா மாறியுள்ளது என்று குறிப்பிட்டுள்ளார்.

உற்பத்திக்கான இந்தியா மற்றும் சுயசார்பு இந்தியா இயக்கங்களின் பலனாக நூற்றுக்கும் மேற்பட்ட நாடுகளுக்கு இந்தியாவில் தேஜஸ் போர் விமானங்கள், பிரம்மோஸ் ஏவுகணைகள் மற்றும் பிரச்சாந்த் ரக விமானங்கள் ஏற்றுமதி செய்யப்படுவதாக அவர் கூறியுள்ளார்.

இதுதவிர, பாதுகாப்பு சார்ந்த தொழில் வழித்தடங்களை உருவாக்கி, அதிகளவில் முதலீடுகள் ஈர்க்கப்பட்டு வருவதாகவும் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.

>><><><<

சிறு, குறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவன ஏற்றுமதியாளர்களுக்கு உதவும் திட்டத்தை செயல்படுத்துவது குறித்து, மத்திய அரசு பரிசீலித்து வருவதாக, வர்த்தக மற்றும் தொழில் துறை அமைச்சர் திரு.பியூஷ் கோயல் தெரிவித்துள்ளார்.

சுவிட்சர்லாந்தின் BERN நகரில், இந்திய வர்த்தக தூதுக் குழுவினரிடையே உரையாற்றிய அவர், நாட்டின் ஏற்றுமதிக்கு ஊக்கம் அளிக்கும் வகையில், ஏற்றுமதியாளர்கள், தங்களது பொருட்களை, புதிய சந்தைகளில் பதிவு செய்வதற்கு நிதியுதவி செய்யும் திட்டம் செயல்படுத்தப்படும் என்றார்.

இதன்படி, பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கான முழுத் தொகையையும் அரசே செலுத்தும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

குறிப்பாக, புதிய ஏற்றுமதியாளர்கள், புதிய சந்தைகளில், புதிய வகை பொருட்களை பதிவு செய்வதற்கு முன்னுரிமை அடிப்படையில் நிதியுதவி அளிக்கப்படும் என்றும் திரு.பியூஷ் கோயல் தெரிவித்தார்.

>><><><<

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் காரணமாக, பொருளாதாரம், பாதுகாப்பு, தொழில்நுட்பம் உட்பட அனைத்துத் துறைகளும் பெரும் வளர்ச்சி கண்டுள்ளதாக மத்திய கலாச்சாரத் துறை அமைச்சர் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் கூறியுள்ளார்.

சென்னையில் மத்திய அரசின் 11 ஆண்டுகால சாதனை குறித்த புத்தகத்தை வெளியிட்டு பேசிய அவர், நாட்டின் வளர்ச்சியில் அனைத்துத் தரப்பு மக்களும் இணைந்து பங்காற்றி வருவதாக தெரிவித்தார்.

சேவை, நல்லாட்சி, மக்கள் நலன் என்ற அடிப்படையில் செயல்பட்டு வரும் மத்திய அரசு, வளர்ச்சி, புதுமை கண்டுபிடிப்புகளுக்கு உயர் முன்னுரிமை அளித்து வருவதாகவும் குறிப்பிட்டார்.

வளர்ச்சி அடைந்த இந்தியாவை உருவாக்கும் வகையில் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருவதாகவும் திரு கஜேந்திர சிங் ஷெகாவத் கூறினார்.

>><><><<

பிரதமர் திரு நரேந்திர மோடி தலைமையிலான அரசின் செயல்பாடுகளால் நாட்டின் பொருளாதாரம் உலகளவில் நான்காவது இடத்திற்கு முன்னேறியுள்ளதாக மத்திய இணையமைச்சர் திரு எல் முருகன் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், கடந்த 11 ஆண்டுகால பிஜேபி ஆட்சியில் நாட்டின் கட்டமைப்பு மேம்பாட்டிற்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவதாக கூறினார்.

தினந்தோறும் 34 கிலோமீட்டர் தொலைவுக்கு புதிய தேசிய நெடுஞ்சாலைகள் அமைக்கப்படுவதாகவும் ரயில்வே மற்றும் துறைமுகங்களும் மேம்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

சென்னை ஐ சி எப் தொழிற்சாலையில் தயாரிக்கப்படும் ரயில்பெட்டிகள் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

99 சதவீத கிராமப்புற சாலைகள் முக்கிய நெடுஞ்சாலைகளுடன் இணைக்கப்பட்டு இருப்பதாகவும் உடான் திட்டத்தின்கீழ் 85 புதிய விமான நிலையங்கள் அமைக்கப்பட்டு இருப்பதாகவும் அவர் கூறினார்.

தமிழகம் மற்றும் புதுச்சேரியில் உள்ள விமான நிலையங்களில் மேம்பாட்டுப் பணிகள் நடைபெற்று வருவதாகவும் திரு எல் முருகன் தெரிவித்தார்.

(சவுண்ட் பைட் - எல் முருகன் - 42 செகண்ட்ஸ்)

>><><><<

கல்வி, சுகாதாரம் உட்பட தமிழகத்தின் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு உலக வங்கி உறுதுணையாக உள்ளதாக முதலமைச்சர் திரு மு க ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை தரமணியில் உலக வங்கியின் உலகளாவிய வர்த்தக மையத்தை திறந்து வைத்து பேசிய அவர், பணிபுரியும் மகளிருக்கான தமிழக அரசின் தோழி விடுதி உள்ளிட்ட திட்டங்களில் உலக வங்கியின் பங்கு உள்ளதாக கூறினார்.

புதுமையான திட்டங்களை செயல்படுத்துவதில் தமிழகம் நாட்டிற்கே முன்னோடியாக திகழ்வதாகவும் அவர் குறிப்பிட்டார்.

முன்னதாக, சென்னை சென்ட்ரல் மெட்ரோ ரயில் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள புத்தக பூங்காவை திறந்து வைத்த முதலமைச்சர், பொதுநூலக இயக்ககம் சார்பில் பல்வேறு மாவட்டங்களில் கட்டப்பட்டுள்ள 110 கூடுதல் நூலக கட்டிடங்கள் மற்றும் 70 சிறப்பு நூலகங்களை திறந்து வைத்தார்.

>><><><<

தமிழகத்தில் இருந்து மாநிலங்களவைக்கு ஆறு உறுப்பினர்களை தேர்ந்தெடுக்க நடைபெறும் தேர்தலில், திமுக, அஇஅதிமுக மற்றும் மக்கள் நீதிமய்யம் கட்சி வேட்பாளர்களின் வேட்பு மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

இத்தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் நேற்று நிறைவடைந்த நிலையில், மனுக்களை மீதான பரிசீலனை இன்று நடைபெற்றது.

6 இடங்களுக்கு 6 பேர் மட்டுமே மனுதாக்கல் செய்துள்ளதால் இவர்கள் போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்படவுள்ளனர்.

>><><><><<

இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு ஏற்படுத்தும் வகையில் மத்திய அரசின் திறன் மேம்பாடு மற்றும் தொழில் முனைவோர் அமைச்சகம் சார்பில் பிரதமரின் தேசிய தொழில் பழகுநர் பயிற்சித்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தமிழகத்தின் திருப்பத்தூர் மாவட்டத்தில் இத்திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருவதாக திறன் மேம்பாட்டு பயிற்சி நிறுவனத்தின் உதவி பயிற்சி அலுவலர் திரு ராஜேந்திரன் கூறியுள்ளார்.

(சவுண்ட் பைட் - ராஜேந்திரன் - 24 செகண்ட்ஸ்)

இந்த பயிற்சி தங்களுக்கு மிகுந்த பயனளிப்பதாக மாணவர்கள் தெரிவித்தனர்.

(சவுண்ட் பைட் - மாணவர்கள் - 20 செகண்ட்ஸ்)

>><><><><<

விளையாட்டுச் செய்திகள்

ஆஸ்திரியா நடைப்போட்டியில் இந்தியா ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப் பதக்கம் வென்றது.

இப்போட்டியின் 35 கிலோமீட்டர் பிரிவில் சந்தீப் குமார் வெள்ளிப் பதக்கத்தையும், ராம் பாபு வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர்.

--------------

உலக ரேபிட் மற்றும் பிலிட்ஸ் செஸ் சாம்பியன் போட்டி இன்று லண்டனில் தொடங்குகிறது.

வரும் 16 ஆம் தேதி வரை நடைபெறவுள்ள இப்போட்டியில் இந்தியாவின் சார்பில் அர்ஜூன் எரிகைசி, விதித் குஜராத்தி, நிகல் சரீன், திவ்யா தேஷ்முக் உட்பட 12 பேர் பங்கேற்கின்றனர்.

--------------

சர்வதேச ஸ்குவாஷ் போட்டிகளுக்கான தரவரிசைப் பட்டியலில் மகளிர் பிரிவில் இந்தியாவின் அனாகத் சிங் 36 ஆவது இடத்திற்கும் ஆடவர் பிரிவில் அபய் சிங் 54 ஆவது இடத்திற்கும் முன்னேறியுள்ளனர்.

**>> End of News <<**